பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරොතයනගර්, ත්‍රිකුණාමලය.
Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk

| | | |
|---|---|---|
| எனது இல. / මගේ අංකය / My No. NP/09/FRM/2008 | உமது இல. / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date. 17.03.2008 |

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல:-PT/10/2008**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**<u>சாரதிகள் மற்றும் காரியாலய சிற்றூழியர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு</u>**

தாபன விதிக் கோவை அத்தியாயம் XXI பந்தி 03இன் பிரகாரம் சாரதிகளும் காரியாலய சிற்றூழியர்களும் சீருடை அணிய வேண்டியது மிகஅவசியம். மேற்குறிப்பிட்ட பந்தியின் பிரகாரம் சீருடை பெறத் தகுதியுடைய ஊழியர்கள் சீருடையைப் பெறுவதற்காக இதுவரை காலமும் ஒருவருக்கு ஒருவருடத்துக்கு ரூபா1,100/- என்ற அடிப்படையில் சீருடையும் பற்றுச்சீட்டும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அத்தொகை மீளளிக்கப்பட்டு வந்தது.

2.தற்காலத்தில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றங்களும், கூலி ஏற்றங்களையும் கருத்தில் கொண்டு கௌரவ ஆளுனர் அவர்களால் 01.01.2008முதல் ஒருவருக்கு ஒருவருடத்துக்கு ரூபா2,000/- (இரண்டாயிரம்)க்கு மேற்படாமல் சீருடையின் நிமிர்த்தம் செய்யப்பட்ட செலவை மீளளிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

3.எனவே சீருடையும் பற்றுச்சீட்டும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்படி செலவை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சி.ரங்கராஜா
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. பிரதிப் பிரதம செயலாளர் - பொது நிர்வாகம் - வ.மா
2. உதவி கணக்காய்வாளர் நாயகம்
3. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு – வ.மா

} தகவலுக்காக

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary 060 2266501
அலுவலகம் / කාර්යාලය / Office 060 2262285
தொலை நகரி / ෆැක්ස් / Fax 026 2226952